**2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்ககளை பதிவு செய்தல்**
**பாதுகாப்பு அமைச்சு**

1. பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனோடிணைந்த கீழே குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்து கொள்வதற்கு நிர்மானம். திருத்த வேலைகள் மற்றும் பொருட்கள், சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக வெளிநாட்டு ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், தேசிய உற்பத்தியாளர்கள், தேசிய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* பாதுகாப்பு அமைச்சு
* இலங்கை தரைப்படை
* இலங்கை கடற்படை
* இலங்கை வான்படை
* அரச வேவு சேவை
* சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம்
* கரையோர பாதுகாப்பு திணைக்களம்
* சிவில் பாதுகாப்பு திணைக்களம்.
* பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலை வித்தியாலயம்
* தேசிய மாணவருக்கான படையணி
* பாதுகாப்பு இராணுவ தலைமையக நிர்மான செயற்திட்டம்

02. **விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்**

அ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விண்ணப்பதாரிகளுக்கு 2022.10.10 தொடக்கம் 2022.11.11 வரை பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்திலிருந்து விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும்.

பாதுகாப்பு அமைச்சு – **www.defence.lk**

ஆ பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப் படிவத் தொகுதி ஏறத்தாழ 59 பக்கங்களைக் கொண்டிருப்பதுடன் அது பின்வரும் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1. பிரதான விண்ணப்பப் படிவம்
2. வெளிநாட்டு வழங்கல் நிறுவனத்தின் தரவுப் பத்திரம் (இணைப்பு “ஏ”)
3. ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகளடங்கிய பத்திரம்
4. 52 பக்கங்களைக் கொண்ட விபரமான பிரிவுப் பட்டியல்

03 **தொகுதி பணம் செலுத்துதல்**

அ. உள்நாட்டு வழங்குநர் ஒருவரிடம் ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் ரூ. 1800/= ஆகும்.

ஆ. வெளிநாட்டு வழங்குநர் ஒருவரிடம் ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் 18 அமெரிக்க டொலர்களாகும். தேசிய முகவர் ஊடாக கட்டணம் செலுத்தும் போது ஒரு குழுவுக்காக அறவிடப்படும் கட்டணம் ரூபா. 6000/= ஆகும்.

இ. 2023 ஆண்டில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் இலங்கை வங்கி தப்றொபேன் கிளையின் 7040119 எனும் இலக்க கணக்கில் வரவுவைத்து இலங்கை வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் பண வைப்பிலிட முடியும். பணத்தை வைப்பிலிடும் போது கணக்கு வைத்திருப்பவரின் பெயரை பாதுகாப்பு செயலாளர் என்று குறிப்பிட்டு வைப்பிலிடும் பத்திரத்தில் “suppliers Registration Category Free – 2023” கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.

ஈ. வெளிநாட்டு வழங்குநர்களும் (உள்நாட்டு பிரதிநிதியொருவர் இல்லாதவிடத்து) 2023 ஆம் ஆண்டிட்கு பதிவுச்செய்தல் கட்டணத்தினை Swift Code ஐ பயன்படுத்தி இலங்கை வங்கிக்கு பணம் செலுத்த முடியும்.

| | |
|---|---|
| Swift No | - BCEYLKLX |
| Branch Code | - 747 |
| Account No | - 7040119 |

உ. பிரிவுக் பணங்களைச் செலுத்தும் போது சமர்ப்பிக்கப்படும் பணவைப்புப் படிவத்தின் பிரதியை விண்ணபபத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.(பணம் வைப்பிலிடப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில்)

ஊ. உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் 2022.10.10 திகதியிலிருந்து 2022.11.11 திகதி வரையான காலப்பகுதியில் பிரிவுப் பணங்களைச் செலுத்தி முடிக்க வேண்டும். 2021..11.11 திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் பிரிவுப் பணங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு பொறுப்புக் கூறமாட்டாது.

04 விண்ணபதாரர் செலுத்தும் தொகுதி கட்டணம் திருப்பி செலுத்தப்படாது. விண்ணபதாரர் கவனக்குறைவு அல்லது அலட்சியம் காரணமாக எந்த தகவலையும் சமர்ப்பிக்கவில்லை மற்றும் தவறான வகையை குறித்தார் என்ற அடிப்படையில் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். இதுபோன்ற சமயத்தில் கூட, தொகுதி கட்டணத்தை திருப்பி செலுத்தபடமாட்டாது என்று தெரிவித்து கொள்கின்றோம்.

05. பிழையின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை ஏற்புடைய ஆவணங்களுடன் 2022 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் உள்நாட்டு/வெளிநாட்டு” எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

**கணக்காளர் (வழங்கல்)**
**பாதுகாப்பு அமைச்சு**
**பாதுகாப்பு தலைமையக கட்டிடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.**

06. 2023 ஆண்டில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உரித்தாகும்.

**செயலாளர்**
**பாதுகாப்பு அமைச்சு**